# அனைவருக்குமான புற்றுநோய் சிகிச்சை பராமரிப்பை மேம்படுத்த உதவுங்கள்

நீங்கள் இங்கே சிகிச்சை பெற்றிருந்தால், NHS இங்கிலாந்தின் தேசிய புற்றுநோய் நோயாளி அனுபவம் சார் மதிப்பாய்வில் பங்கேற்கும்படி கேட்கப்படுவீர்கள். நீங்கள் எதிர் கொண்டதில் எவற்றை சிறப்பான பணிகளாகக் கருதுகிறீர்கள் மற்றும் வருங்காலத்தில் வரவுள்ள புற்று நௌ நோயாளிகளுக்கு சிறப்பாகப் பணியாற்ற இவ்விஷயங்களில் மேம்பாடு தேவைப்படுகிறது என்பதைக் கண்காணிக்க இந்தக் கணக்கெடுப்பு எங்களுக்கு உதவுகிறது,

ஏப்ரல், மே அல்லது ஜூன் 2023 இல் உள்நோயாளியாகவோ அல்லது பகல்நேர கவனிப்பு நோயாளியாகவோ அனுமதிக்கப்பட்டு புற்றுநோய் தொடர்பான பராமரிப்பு அல்லது சிகிச்சையைப் பெற்றுள்ள அனைத்து NHS நோயாளிகளும் மதிப்பாய்வில் பங்கேற்க தொடர்பு கொள்ளப்படுவார்கள்.
.

### பங்கேற்பு தன்னார்வ முறையிலானது

NHS இங்கிலாந்துடன் ஒப்பந்தத்தின் கீழ் செயலாற்றும் ஒரு சுயாதீன அமைப்பினால் இக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும். உங்களைத் தொடர்புகொள்ள அவர்கள் உங்கள் தனிப்பட்ட விவரங்களைப் பயன்படுத்துவார்கள். மதிப்பாய்வை மேற்கொள்ள மட்டுமே உங்கள் விவரங்கள் பயன்படுத்தப்படும். இந்த விவரங்கள் NHS அறக்கட்டளை மூலம் வழங்கப்படும். உங்கள் தனிப்பட்ட தகவல்கள் பாதுகாப்பாகவும் ரகசியமாகவும் கையாளப்படும். உங்களை அடையாளப்படுத்தும் எந்தவொரு தகவலையும் நாங்கள் வெளியிட மாட்டோம்.

---

நீங்கள் பங்கேற்க **விரும்பவில்லை** என்றால் அல்லது மதிப்பாய்வு சார்ந்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து இங்கே தொடர்பு கொள்ளவும்:

# உங்கள் கருத்து ஏன் முக்கியமானது?

தெளிவான தகவலை வழங்குதல், அனைவருக்கும் உகந்த மதிப்பும் மற்றும் கருணையும் காட்டுதல் மற்றும் நோயாளிகளை பாதுகாப்பாகவும் வசதியாகவும் உணர வகை செய்தல் இவற்றின் மூலம் சுகாதாரம் சார்ந்த அனுபவங்களை மேம்படுத்த விரும்புகிறோம்.

## நீங்கள் எங்களுக்கு வழங்கும் தகவல்கள் எவ்விதத்தில் பயன்படும்?

NHS இங்கிலாந்து உங்கள் பெயரையும் முகவரியையும் பயன்படுத்தி உங்களுக்கு மதிப்பாய்வை அனுப்பும். உங்கள் பதில்கள் உங்கள் விவரங்களுடன் பொருத்தப்படாது. உங்கள் தகவல் பாதுகாப்பாகப் பராமரிக்கப்படும் மற்றும் உங்களை அடையாளப்படுத்தும் எந்தவொரு தகவலும் வெளிவராது.

நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் நபர்கள் எதில் சிறந்தவர்கள் மற்றும் எவற்றை மேம்படுத்த வேண்டும் என அறிந்து அவர்கள் மேம்பாட்டிற்கு உதவ மட்டுமே உங்கள் பதில்களைப் பயன்படுத்துவோம்.

**பங்கேற்றல்**

இந்த ஆண்டின் பிற்பகுதியில் இந்த மதிப்பாய்வு நடத்தப்படும். நீங்கள் நிரப்புவதற்கு ஏதுவாக இது அச்சிடப்பட்ட படிவமாக இருக்கும் அல்லது நாங்கள் உங்களுக்கு வழங்கும் இணைப்பைப் பயன்படுத்தி ஆன்லைனிலும் பதிலளிக்கலாம்.



தொலைபேசி மூலமாகவும் உங்கள் பதில்களைத் தெரிவிக்கும் வசதியும் உண்டு. நீங்கள் மொழிபெயர்ப்பாளடின் உதவியை நாட விரும்பினால் அதற்கான வழிகளை நாங்கள் உங்களுக்கு விளக்குவோம்.

## நீங்கள் பங்கேற்க விரும்பவில்லை என்றால் அல்லது மதிப்பாய்வு சார்ந்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து இங்கே தொடர்பு கொள்ளவும்: